# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,501 – 1965 සැප්තැම්බර් 9 වැනි බ්‍රහස්පතින්ද — 1965.9.9

14,501 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 107 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 114 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | 114 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### கம்பளை மாநகர சபை

#### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

#### கட்டளை

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2, 5, 6, 9 ஆம் பிரிவுகளால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு 1,
1965 ம் ஞ செப்டெம்பர் மீ 1 ந் உ.

1965, மார்ச் 19 இன் 14,350 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட,கம்பளை மாநகர சபை பற்றிய, கட்டளை, அதன் பந்தி 6 இல் " ஜனவரி 1, 1966 " என்னும் வார்த்தைக்கும் எண்களுக்கும் பதிலாக " ஜனவரி 1,1967 " என்னும் வார்த்தையையும் எண்களையும் இட்டு, இத்தால் திருத்தப்படுகின்றது.

9–526–9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

எல் டி பி. 9/64 (4)
எல் ஜீ டி. ஜீ ஐ 10/1/14/1

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆககப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஞூ ஆகஸ்ட் மீ 25 ந் உ.

#### கட்டளை

1964, ஜூலை 10 இன் 14,102 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான மேல் மாகாணத்து, கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹபிட்டிகம கோறளைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவின் யட்டிகஹா கிராமப் பிரதேச உட்பிரிவு சம்பந்தமான கட்டளையில் சொல்லப்படும் பிரிப்பை செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால் ஏற்பாடு செய்யப் படுகின்றது.

#### அட்டவணை

புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை, அந்தப் புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. 1965 ஜனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான, பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணை விதிகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் இத்துணைவிதிகள் சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு அந்தப் புதிய கிராமப் பிரதேசத்தில் நடைமுறையிலிருப்பதோடு அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப்பவையாகக் கருதவும் படும்.

3. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து, 1965, பெப்புருவரி 1 இல், புதிய பலலேவெல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாகக் கருதப்படும் ; பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின்

மீதமுள்ள அசைவுள்ள சொத்து புதிய கொட்டதெனியாவ கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 அலுமாரி .. | 1 புனல் .. | 1 கத்தரிக்கும் தரி |
| 1 அலவாங்கு .. | 1 சிவிறி .. | 1 புற்கத்தரி |
| 1 கோடரி .. | 1 கத்தி .. | 1 வாள் |
| 5 பிக்கான்கள் .. | 1 கண்ணாடிவிளக்கு | 1 திருகாணி செலுத்தி |
| 2 மையொற்றும் அணைகள் | 1 தேசப்படம் (யட்டிகஹா) | 1 கோள்விப்பத்திரப் பெட்டி |
| 1 நீண்டவாங்கு .. | 30 மண்வெட்டிகள் .. | 1 எழுத்துமேசை |
| 3 கைபிடிநாற்காலிகள் | 1 ஆணிபிடுங்கி .. | 4 மேசைகள் |
| 4 மலகூடவேலை வண்டிகள் .. | 5 கண்ணாடி உருண்டைகள் .. | 1 ஆங்கில தட்டெழுத்துப்பொறி |
| 13 நாற்காலிகள் (சாதாரணம்) | 5 பத்திரக் கோப்பு கௌவிகள் | 1 சிங்கள தட்டெழுத்துப்பொறி |
| 1 சுவர் மணிக்கூடு .. | 1 துளையிடுங் கருவி .. | 5 தட்டங்கள் |
| 1 காசுப்பெட்டி .. | 6 ஆமைப்பூட்டுகள் .. | 1 அளவுநாடா |
| | 2 பேனுக்கள் .. | 1 தட்டெழுத்து மேசை |
| 1 றலே சைக்கில் .. | | |
| 1 இணைப்படியெடுக்கும் பொறி | 1 வந்தானம் .. | 1 தட்டெழுத்து முக்காலி |
| 1 பத்திரக் கோப்புப் பேழை | 3 குப்பைவாரிகள் .. | 2 ஒற்றைச்சில்லு வண்டிகள் |
| 1 நீர்வடி .. | 2 ரூல்கம்புகள் (18″) | 1 கம்பிகட்டும் கருவி |
| 1 துவக்கு .. | 1 மழைக்கோட்டு .. | 1 இறப்பர் முத்திரையச்சு தாங்கி |
| 1 சம்மட்டி .. | 1 மையணை .. | 1 கத்தி |
| | 3 மைக்கூடு .. | |

பல்லேவெல கிராமப் பிரதேசத்துக்குள் வரும் முத்தரகம, கல்எலிய ஆகிய இடங்களிலுள்ள பிரசவ, சிசு நலபிணியாய் நிலையங்களில் உள்ள அசைவுள்ளவையனைத்தும் அந்தக் கிராமப் பிரதேசத்துக்கு உரித்தாக்கப் படும்.

ஹெட்டிமுல்லையிலுள்ள பிரசவ, சிசுநலபிணியாய் நிலையத்தில் உள்ள அசைவுள்ளவையனைத்தும் புதிய கொட்டதெனியாவ கிராமப் பிரதேசத்துக்கு உரித்தாக்கப்படும்.

4. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும், அந்தக் காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கும் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு 1965 பெப்புருவரி 1 இல் உரித்தாக்கப்படுவதாகக் கருதப்படும்.

5. பழைய கிராமப் பிரதேசத்தின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள் கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, 1965 பெப்புருவரி 1 இல் இருந்து, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப் படுவதாகக் கருதப்படும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோரில் வைக்கப்பட்டிருந்த பத்திரங்கள், சாதனங்களின் கோப்புகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோருக்கு மாற்றப் படுவதாகக் கருதப்படும்.

7. அதன் முன்னுள், இன்னுள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குள்ள பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படும்.—

(அ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய பல்லேவெல, கொட்டதெனியாவ கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 வீதத்தில்.

(ஆ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் சேவை செய்த பின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் உபகாரச் சம்பளஙகளின் பொருட்டு புதிய பல்லேவெல, கொட்டதெனியாவ கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 வீதத்தில்.

(இ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் இப்பொழுது சேவை செய்பவர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய பல்லேவெல, கொட்டதெனியாவ கிராமச் சபைகளுக் கிடையே 1 : 1 வீதத்தில்.

8. 1965 ஜனவரி 31 இல், பழைய யட்டிகஹா கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் வரவிலுள்ள பொது நிதி 1965, பெப்புருவரி 1 இல் புதிய கிராமச் சபைகளின் பொது நிதிகளில் கீழே குறித்துள்ள விகிதப் படி வரவுவைக்கப்பட வேண்டும்.—

பல்லேவெல கிராமச் சபைக்கு ஒரு பாதி
கொட்டதெனியாவ கிராமச் சபைக்கு ஒரு பாதி

9. இந்த அட்டவணையில்—

(அ) " புதிய கிராமப் பிரதேசம் " எனபது, வேறுவிதம் சொல்லப் பட்டாலன்றி, 1964, ஜூலை 10 இன் 14,102 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான கட்டளைக்குள்ள அட்டவணையில் விவரிக் கப்படும் பல்லேவெல கிராமப் பிரதேசத்தையேனும் கொட்டதெனியாவ கிராமப் பிரதேசத்தையேனும் கருதும்.

(ஆ) " பழைய கிராமப் பிரதேசம் " என்பது புதிய கிராமப் பிரதேசங்கள் தோனறுவதற்கு முன்னர் இருந்த யட்டிகஹா கிராமப் பிரதேசத்தைக் குறிக்கும்.

9–506—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆடு ஒகத்து மீ 25 ந் உ.

### கட்டளை

1964, யூன் 27 இன் 14,083 ஆம் இலக்க விசேட கசெற்றில் பிரசுரமான கட்டளைகளில் சொல்லப்படும், பதுளை மாவட்டத்து யட்டகிந்தை பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில், புதிய ரம்புக்பொத்த கிராமப் பிரதேச அமைப்பையும், றில்போலா கிராமப் பிரதேசத்தை மாற்றி மீள வரையறுத்தலையும் செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு, இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில, இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. புதிய ரம்புக்பொத்தறில்போலா கிராமப் பிரதேசங்கள் ஒவ்வொன்றினதும் புதிய கிராமச் சபை, அந்தப் புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய றில்போலா கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. 1965, ஜனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான பழைய றில்போலா கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் இத்துணை விதிகள் சம்பந்தமுடையனவராயிருக்குமளவுக்கு, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்தில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப் பவையாகக் கருதவும் படும்.

3. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகையில ஒரு பாதி, 1965, பெப்புருவரி 1 இல் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

4. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1965 பெப்புருவரி 1 இல், அந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்துள்ள கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித் தாக்கப்படுவதாகக் கருதப்படும்.

5. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையவையாயிருக்குமளவுக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து அந்த புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்படுவனவாகக் கருதப்படும்.

6. 1965, ஜனவரி 31 இல், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோரில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்கள், சாதனங்களின் கோப்புகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை

சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து அந்த புதிய கிராமப் பிர்தேசத்துக் கிராமச் சபையின் கந்தோருக்கு மாற்றப்படுவனவாகக் கருதப்படும்.

7. 1965, ஜனவரி 3 இல், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து 1965, பெப்புருவரி 1 இல் ரம்புக்பொத்த கிராம பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப் படுவதாகக் கருதப்படும். பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் மீதமுள்ள அசைவுள்ள சொத்து புதிய நில்போலா கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும்.—

| | |
|---|---|
| 1 அலுமாரி | நில்போலா கிராமச் சபையால் |
| 12 நாற்காலிகள் | கீழ்க்காணும் நிலையங்களுக்கு கொடு |
| 1 வாங்கு | கப்பட்ட சொத்துயாவும்— |
| 2 கோப்பு எந்தானம் | (அ) வித்யாகுண, பராக்கிரம |
| 1 எழுத்து மேசை | உடவெலதிஸ்ஸ, மாலினி |
| 1 மேசை (சாதாரணம்) | தர்மபால ; |
| 1 துளையிடுங்கருவி | (ஆ) உடவெல பிரசவ நிலையம். |
| 4 தட்டங்கள் | |
| 2 திருகாணிச்சாவிகள் (பழையவை) | |

8. அதன் முன்னுள், இன்னுள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குள்ள பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படும்—

(அ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு நில்போலா ரம்புக்பொத்த கிராமப் பிரதேசங்களின் புதிய சபைகள் ஒவ்வொன்றுக்குமிடையே 1 : 1 வீதத்தில்

(ஆ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் சேவை செய்த பின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு நில்போலா, ரம்புக்பொத்த கிராமப் பிரதேசங்களின் புதிய சபைகள் ஒவ்வொன்றுக்கும் இடையே 1 : 1 வீதத்தில்.

(இ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் இப்பொழுது சேவை செய்பவர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு நில்போலா, ரம்புக்பொத்த கிராமப் பிரதேசங்களின் புதிய சபைகள் ஒவ்வொன்றுக்குமிடையே 1 : 1 வீதத்தில்

9. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது வேறு விதம் சொல்லப்பட்டாலன்றி 1964, யூன் 27 இன் 14,083 ஆம் இலக்க விசேடகசெற்றில் பிரசுரமான கட்டளையால் அமைக்கப்பட்ட ரம்புக்பொத்த கிராமப் பிரதேசத்தையேனும் 1964, யூன் 27 இன் 14,083 ஆம் இலக்க அசாதாரண கசெற்றில் பிரசுமான கட்டளையால் மாற்றி, மீளவரையறுக்கப்பட்டபடியான நில்போலாகிராமப் பிரதேசத்தையேனும் கருதும் ;

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது 1965, பெப்புருவரி 1 இன் முன்னர் இருந்த நில்போலா கிராமப் பிரதேசத்தைக் கருதும்.

9-508—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

எடி—பி. 74/39.

எஜீடி—ஜிஐ. 10/3/1.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஓகத்து மீ 25 ந் உ.

### கட்டளை

1964 ஜூலை 20 இன் 14,113 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட, பொலனறுவை மாவட்டத்து தம்மங்கடவை பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பொலனறுவை கிராமப் பிரதேசத்தையும் திவுலாணு கிராமப் பிரதேசத்தையும் உட்பிரிவு செய்யும் கட்டளையில் சொல்லப்படும் பிரிப்பை செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை, அப்புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. இக்கட்டளையின் பிரசுரத்தேதியில் நடைமுறையிலிருக்கின்றபடியான, பழைய கிராமப் பிரதேசங்களின கிராமச் சபைகளால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும், இத்துணை விதிகள் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை ஒவ்வொன்றுக்கும் சம்பந்த முடையனவாயிருக்குமளவுக்கு, அந்த புதிய கிராமப் பிரதேசத்தில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு அந்த புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளால் ஆக்கப்பட்டிருப்பவையாகக் கருதவும்படும்.

3. இக்கட்டளையின் பிரசுரத்ரேதியில் பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் (மின்னியற்கணக்குகள் உட்பட்ட) பொது நிதிகளின் வரவிலுள்ள மொத்ததொகைகளில் மூன்றில் ஒன்று, அத்தேதியில அல்லது அதற்குப் பிறகு, புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

4. பழைய பொலனறுவை, திவுலாணுகிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு உரித்தாயுள்ள அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து, இக்கட்டளையின் பிரசுரத் தேதியில், புதிய மெதபற்று வடக்கு, மெதப்பற்று தெற்கு, மெதபற்று மத்தி கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு கீழ்க்காணும் முறையில் உரித்தாக்கப்படுவதாக கருதப்படும் :—

### மெதபற்று வடக்கு

| | |
|---|---|
| எழுத்து மேசை | 1 |
| சாதாரண நாற்காலிகள் | 10 |
| துளையிடுங்கருவி | 1 |
| கத்தி | 1 |
| கைபிடியுள்ள மண்வெட்டிகள் | 2 |
| முதிரை எழுத்துமேசை (இரண்டு பெரிய இலாச்சிகளுடன்) | 1 |
| கந்தோர் தட்டம் | 1 |
| காகிதப்பாரம்—கண்ணுடி | 1 |
| மேசை அணை—சிறியது | 1 |

### மெதபற்று தெற்கு

| | |
|---|---|
| தட்டெழுத்துப்பொறி, சிங்களம் | 1 |
| தட்டெழுத்துப்பொறி, ஆங்கிலம் | 1 |
| அலுமாரி | 1 |
| எழுத்துமேசைகள் | 2 |
| மேசை | 1 |
| நாற்காலிகள், சாதாரணம் | 15 |
| நாற்காலி கைபிடியுடன் | 1 |
| கடித எந்தானம் | 1 |
| தட்டம் | 1 |
| தேதி முத்திரையச்சு | 1 |
| விளம்பரப்பலகை | 1 |
| ரூல்கம்பு உருண்டையானது | 1 |
| ஆமைப்பூட்டு | 1 |
| துளையிடுங்கருவி | 1 |
| கத்திகள் | 2 |
| கைபிடியுள்ள மண்வெட்டிகள் | 2 |
| அரம் | 1 |
| நாடா | 1 |
| சட்டிகள், இருப்பு | 3 |
| வாளி | 1 |
| சைக்கிள் (ஹம்பர்) | 1 |

### மெதபற்று மத்தி

| | |
|---|---|
| எழுத்து மேசை | 1 |
| மரப்படிகள் | 1 |
| நாற்காலிகள், கைபிடியுடன் | 2 |
| கூட்டமேசைகள் | 2 |
| கூட்டநாற்காலிகள் | 12 |
| நாற்காலி, சாதாரணம் | 1 |
| எழுத்துமேசை (5 இலாச்சிகள்) | 1 |
| கந்தோர் இலாஞ்சனை | 1 |
| எழுத்துமேசை (2 இலாச்சிகள்) சிறியது | 1 |
| தட்டெழுத்துமேசை (3 இலாச்சிகள்) | 1 |
| தட்டெழுத்து முக்காலி | 1 |
| அலுமாரி | 1 |
| ஜெஸ்டெட்னர், இணைப்படிஎடுக்கும் பொறி | 1 |

| | |
|---|---|
| மேசை (சிறியது) | 1 |
| தட்டெழுத்துப்பொறி, சிங்கள, ஒலிம்பியா | 1 |
| தட்டெழுத்துப பொறி ஆங்கிலம், அண்டர்வூட் | 1 |
| புத்தக ஏந்தானம் | 1 |
| பத்திரகோப்புப் பேழை | 1 |
| கந்தோர்த்தட்டம் | 2 |
| 3 தட்டு ஏநதானம் | 1 |
| துளையிடுங்கருவி (துளைகள் 2) | 1 |
| காகிதப்பாரங்கள் கண்ணாடி | 2 |
| மேசை அணை | 1 |
| மை அணைகள் | 2 |
| மைக்கூடு (3 குழிகள்) | 1 |
| மைக்கூடு (சிறியது) | 1 |
| நீர் நணைகளம் | 1 |
| தபால் ஏந்தானம் (3 அறைகள்) | 1 |
| குப்பைக்கூடை (பிரம்பு) | 1 |
| சைககிள் ரலே | 1 |
| சவரீ மணிக்கூடு (வில்கோ) | 1 |
| காகிதச் சுருள் | 1 |
| சைக்கிள் சாவி | 1 |

5. இக்கட்டளையின் பிரசுரத்தேதியில் பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு உரித்தாயுள்ள அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் அந்தக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்துள்ள புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு உரித்தாக்கப்படுவதாகக் கருதப்படும்.

6. பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் உரிமைகள் கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, இக்கட்டளையின் பிரசுரத்தேதியிலிருந்து அந்தப்புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு மாற்றப்படுவனவாகக் கருதப்படும்.

7. பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் கந்தோர்களில் வைத்திருககப்பட்ட பத்திரஙகள், சாதனங்களின் கோப்புகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவைசம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, இக்கட்டளையின் பிரசுரத் தேதியிலிருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபைக் கந்தோருக்கு மாற்றப்படுவதாகக் கருதப்படும்.

8. அதன் முன்னுள், இன்னுள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமச் சபைக்குள்ள பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படும்—

(அ) பழைய கிராமச் சபைகளில் கொஞ்சக்காலம் சேவை செய்த பிறகு வெளியேமாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் உபகாரச் சம்பளஙகளின் பொருட்டு புதிய மெதபற்றுவடக்கு, மெதபற்று மத்தி, மெதபற்று தெற்கு கிராமச் சபைகளுககிடையே 1 :1 :1 வீதத்தில் ;

(ஆ) பழைய கிராமச் சபைகளின் இப்பொழுது சேவை செய்பவர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய மெதபற்று வடக்கு, மெதபற்று மத்தி, மெதபற்று தெற்கு கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 : 1 வீதத்தில்.

9. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசஙகள்" என்பது வேறு விதம் சொல்லப்பட்டாலன்றி 1964 ஜுலை 20 இன் 14,113 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான கட்டளையில விவரிக்கப்படும் மெதபற்று வடக்கு கிராமப் பிரதேசத்தையும், மெதபற்று மத்திய கிராமப் பிரதேசத்தையும், மெதபற்று தெற்கு கிராமப் பிரதேசத்தையும் கருதும் ;

"பழைய கிராமப் பிரதேசங்கள்" என்பது பொலனறுவை கிராமப் பிரதேசத்தையும் திவுலாறு கிராமப் பிரதேசத்தையும் கருதும்.

9–507—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

எல் டி./பி. 9/64 (51)
எல் ஜீ டி./ஜீ. எப்./11/6 (பி)

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, ஒகஸ்ட் 31, 1965.

### கட்டளை

1964 ஜுலை 31 இன் 14,126 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கண்டி மாவட்டத்து தும்பறை பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கந்தபஹல கோறளைக் கிராமப் பிரதேச உட்பிரிவு பற்றிய கட்டளையில் சொல்லப்படும் பிரிப்பை செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை, அப்புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. 1965, ஜனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான, பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணை விதிகள் யாவும், இத்துணை விதிகள் அப்புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தமுடையனவாயிருக்கும் அளவுக்கு, அந்த புதிய கிராமப் பிரதேசத்தில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு அந்த புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப்பவையாக கருதவும்படும்.

3. 1965 ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகையில் ஏழில் இரண்டு 1965, பெப்புருவரி 1 இல், புதிய ஹசாலக கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியிலும் ஏழில் ஐந்து புதிய மினிபே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியிலும் வரவு வைக்கப்படும்.

4. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உயிர்த்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து, 1965, பெப்புருவரி 1 இல் புதிய மினிபே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாக கருதப்படும். பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் மீதமுள்ள அசைவுள்ள சொத்து புதிய ஹசாலக கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும்.

1 அடிமட்டம்
1 தபால் தட்டம் (மரம்)
1 துளையிடுங்கருவி
1 எழுத்து மேசை
1 தட்டெழுத்து மேசை
1 சிங்கள தட்டெழுத்துப்பொறி (ஒலிம்பியா)
1 பத்திரக்கோப்பு அலுமாரி
1 சிற்றலுமாரி
2 மண்வெட்டிகள்
2 கத்திகள்
1 சிறுகத்தி
1 கோடரி
1 மலகூடவேலை வண்டி
2 மலகூட வாளிகள்
1 நாகம்பூசிய வாளி
2 பாதை வள்ளங்கள்

5. 1965, ஜனவாரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும், 1965, பெப்புருவரி 1 இல், அந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்துள்ள புதிய கிராமப் பிரேதசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாக கருதப்படும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு 1965, பெப்புருவரி 1 இல் இருந்து அந்த புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்படுவதாக கருதப்படும்.

7. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோரில் வைத்திருக்கப்பட்ட கோப்புகள், பத்திரங்கள், சாதனங்கள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து அந்த புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோருக்கு மாற்றப்படுவதாகக் கருதப்படும்.

8. அதன் முன்னுள், இன்னுள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குள்ள பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படும்.

(அ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய மினிபே, ஹசாலக சபைகளுக்கிடையே 5 : 2 வீதத்தில் ;

(ஆ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் சேவை செய்த பின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய மினிபே, ஹசாலக சபைகளுக்கிடையே 5 : 2 வீதத்தில் ;

(இ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் இப்பொழுது சேவை செய்யும் பணியாட்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய மினிபே, ஹசாலக சபைகளுக்கிடையே 5 : 2 வீதத்தில்.

9. இந்த அட்டவணையில்—

" புதிய கிராமப் பிரதேசம் " என்பது வேறு விதம் சொல்லப் பட்டாலன்றி, 1964, ஜூலை 31 இன் 14,126 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக் குள்ள அட்டவணை யில் விவரிக்கப்படும் ஹசாலக கிராமப் பிரதேசத்தை அல்லது மினிபே கிராமப் பிரதேசத்தைக் கருதும் ;

" பழைய கிராமப் பிரதேசம் " என்பது 1965, பெப்புருவரி 1 க்கு முன்னர் இருந்த கந்தபஹல கோறளைக் கிராமப் பிரதேசத் தைக் கருதும்.

9–510—9.9.65 நிதிகதிய வர்த்தமானி இல. 14,501

---

LD.—B 9/64 (b)

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், 1964, யூலை 10 இன் 14,102 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான, கண்டி மாவட்டத்து உடுநுவர,யட்டிநுவர பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள உடுநுவர மெதபலாத தெற்கு, உடுநுவர மெதபலாத வடக்கு கிராமப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் அமைந்திருக்கும் இன்றுள்ள வட்டாரங்களை புதிய வட்டாரங்களாக உட்பிரிவு செய்தல்பற்றிய அறிவித்தலை இத்தால், பின்வருமாறு திருத்துகின்றேன்:—

(அ) அதன் பந்தி 3 (அ) வில், " 1964 ஆம் ஆண்டில் " என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " 1966 ஆம் ஆண்டில் " என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் இட்டும் ;

(ஆ) அதன் பந்தி 3 (ஆ) வில், " 1965, பெப்புருவரி முதல் நாள் " என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, " 1966, பெப்புருவரி முதல் நாள் " என்னும் வார்த்தைகளை யும் இலக்கங்களையும் இட்டும்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு 31, ஆகஸ்ட் 1965.

9–511/1—9.9.65 நிதிகதிய வர்த்தமானி இல. 14,501

---

## உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 31 ஓகஸ்ட், 1965.

### கட்டளை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1964, யூலை 3 இன் 14,092 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கண்டிமாவட்டத்து உடுநுவர, யட்டிநுவர பெரும்பாக இறைவரி உத்தி யோகத்தர் பிரிவிலுள்ள உடுநுவர மெதபலாத வடக்கு, உடுநுவர மெதபலாத தெற்கு கிராமப் பிரதேசங்கள் பற்றிய கட்டளை, அதன் பாயிரத்தில, இத்தால், பின்வருமாறு திருத்தப்படுகின்றது—

(அ) " 1965, பெப்புருவரி முதல் நாளிலிருந்து " எனும் வார்த்தை களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, " 1966, பெப்புருவரி முதல் நாளிலிருந்து " எனும் வார்த்தைகளையும் இலக்கங் களையும் இட்டும் ;

(ஆ) " 1965, ஜனவரி முப்பத்தோராம் நாளுக்கு முன்பு " எனும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " 1966, ஜனவரி முப்பத்தொராம் நாளுக்கு முன்பு " என்னும் வார்த்தைகளை யும் இலக்கங்களையும் இட்டும்.

9–511/2—9.9.65 நிதிகதிய வர்த்தமானி இல. 14,501

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டமும் உள்ளூர் அதிகாரத்தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டமும்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவாலும், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரத் தாபனங் கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவாலும் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்ச ரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு 1, 31 ஓகஸ்ட், 1965.

### கட்டளை

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழும், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவாலும் ஆக்கப்பட்டு, 1964, யூலை 3 இன் 14,092 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட, கண்டி மாவட்டத்து உடுநுவர, யட்டிநுவர பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள உடுநுவர மெத பலாத கிராமப் பிரதேச உட்பிரிப்புப்பற்றிய கட்டளை அதன் பந்தி 2 (ஆ) வில் " 1965, பெப்புருவரி முதல் நாளில் " என்னும் வார்த்தை களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, " 1966, பெப்புருவரி முதல் நாளில் " என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9–511/3—9.9.65 நிதிகதிய வர்த்தமானி இல. 14,501

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான, (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந உ.

### கட்டளை

1964, யூலை 31 இன் 14,126 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக் கப்பட்ட, மொனராகலை மாவட்டத்தில், முறையே வெல்லஸ்ஸ, மொன ராகலை மதுல்ல பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் பிரிவுகளி லுள்ள வேகம் பற்று நில்கல, புத்தளை வேதிரட, தம்பகல்லே ஆகிய மூன்று கிராமப் பிரதேசங்களையும் பிபிலே, கொடகம, மொனராகலே, சியம்பலந்துவ, தம்பகல்லே எனும் ஐந்து கிராமப் பிரதேசங்களாக உட் பிரிவு செய்யும் கட்டளையில் சொல்லப்படும் பிரிப்புகளை செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு, இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை, அந்தப் புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதே சத்துக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. 1965, சனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான, பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணை விதிகள் யாவும் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் இத்துணை விதிகள் சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, அந்தப் புதிய கிராமப் பிரதேசத் தில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு அந்தப்புதிய கிராமப் பிரதேசத் துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப்பவையாக கருதவும்படும்.

3. 1965, சனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் பொது நிதியின் வரவிலுள்ள தொகைகள் பின்வரும் முறை யில் பகிரப்படுகின்றன :—

(அ) பழைய வேகம்பற்று நில்கல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகையில் நூற்றுக்கு ஐம்பது வீதம், 1965, பெப்புருவரி 1 இல் பிபிலே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்பட்டு, மீதமுள்ள நூற்றுக்கு ஐம்பது வீதமும் அதே தேதியில் கொடகம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

(ஆ) பழைய புத்தளை வேதிரட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொதுநிதியின் வரவிலுள்ள தொகையில் ஐந்தில் இரண்டு,1965, பெப்புருவரி 1 இல் புதிய சியம்பலந்துவ கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும். குறித்த பழைய சபையின் பொது நிதியின் மீதமுள்ள ஐந்தில் மூன்றும் அதே தேதியில் புதிய மொனராகலே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

(இ) பழைய தம்பகல்லே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகையில் மூன்றில் ஒன்று, 1965, பெப்புருவரி 1 இல் புதிய சியம்பலந்துவ கிராமப் பிர தேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப் படும்.

4. 1965, சனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு உரித்தாயுள்ள அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அசைவுள்ள சொத்து, 1965, பெப்புருவரி 1 இல் புதிய கிராமப் பிரதே சங்களின் கிராமச் சபைகளுக்கு, கீழ்க்காணும் முறையில் உரித்தாக்கப் படும் :—

(அ) பழைய வேகம்பற்று நில்கல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து, புதிய கொட கம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும். குறித்த பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் மீதமுள்ள அசைவுள்ள சொத்து புதிய பிபிலே கிராமப் பிரதேசத் துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும்.

#### கொடகம கிராமச் சபைக்கு உரித்தான அசைவுள்ள சொத்து

| | |
|---|---|
| 1 கோடரி | 1 உருக்குப்பேழை |
| 1 மர அலுமாரி | 2 இலாச்சிகளுள்ள எழுத்து மேசைகள் |
| 1 சிறிய அலுமாரி | 12 சாதாரண நாற்காலிகள் |
| 1 இலாச்சிகளுள்ள பழைய மேசை | 2 சாதாரண மேசைகள் |
| 4 கைபிடி நாற்காலிகள் | 1 ஒலிம்பியா சிங்கள தட்டெழுத்துப்பொறி |
| 1 கூட்டமண்டப மேசை | 1 தேதி முத்திரையச்சு |
| 1 வாங்கு | 6 மண்வெட்டிகள் |
| 1 சிறிய மேசை | |
| 7 கத்திகள் | |

(ஆ) புத்தளை வேதிரட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித் தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க் காணும் அசைவுள்ள சொத்து புதிய சியம்பலந்துவ கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும் ; குறித்த பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் மீதமுள்ள அசைவுள்ள சொத்து புதிய மொனராகலே கிராமப் பிரதே சத்துக் கிராமச சபைக்கு உரித்தாக்கப்படும்.

#### மொனராகலே கிராமச் சபைக்கு உரித்தான அசைவுள்ள சொத்து

| | |
|---|---|
| 1 மேசை | 4 கைபிடி நாற்காலிகள் |
| 1 சாய்மனை வாங்கு | 1 கேள்விப்பத்திரப் பெட்டி |
| 1 சாதாரண நாற்காலி | 1 விளம்பரப்பலகை |

5. பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு உரித்தா யுள்ள அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி அல்லது கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அது சம்பந்தமுடைத்தாயிருக்கு மளவுக்கு, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக்கு கிராமச் சபைக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து மாற்றப்படும்.

6. பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்தமுடைத்தாயிருக்குமளவுக்கு, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து மாற்றப்படுவதாக கருதப்படும்.

7. பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் கந்தோர் களில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்கள், சாதனங்களின் கோப்புகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் அவை சம்பந்த முடையனவாயிருக்குமளவுக்கு, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருநது மாற்றப்படும்.

8. அவற்றின் முன்னுள், இன்னுள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமச் சபைகளுக்குள்ள பொறுப்புகள் கீழ்க்காணும் முறையில் பகிரப்படும்.—

(அ) (1) பழைய வேகம்பற்று நில்கல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங் களின பொருட்டு புதிய பிபிலே, கொடகம கிராமப் பிரதேசங் களின் கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 விகிதத்தில்.

(2) பழைய வேகம்பற்று நில்கல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் சேவை செய்தபின்னர் வெளியே மாற்றப்பட்டி ருக்கும் பணியாட்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய பிபிலே, கொடகம கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 விகிதத்தில்.

(ஆ) (1) பழைய புத்தளை வேதிரட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங் களின் பொருட்டு புதிய மொனராகலே, சியம்பலந்துவ கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கிடையே 5 : 2 விகிதத்தில்.

(2) பழைய புத்தளை வேதிரட கிராமப் பிரதேசத்தில் சேவைசெய்த பின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் உப காரச் சம்பளங்களின் பொருட்டு புதிய மொனராகலே சியம் பலந்துவ கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கிடையே 5 : 2 விகிதத்தில்.

(இ) (1) பழைய தம்பகலே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய தம்பகல்லே, சியம்பலந்துவ கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுககிடையே 3 : 1 விகிதத்தில்.

(2) பழைய தம்பகல்லே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில சேவை செய்தபின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணி யாட்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய தம்ப கல்லே, சியம்பலந்துவ கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கிடையே 3 : 1 விகிதத்தில்.

(3) தம்பகல்லே கிராமச் சபையில் இப்பொழுது சேவை செய்வோரின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய தம்பகல்லே சியம் பலந்துவ கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கிடையே 3 : 1 விகிதத்தில்.

9. அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது வேறுவிதம் சொல் லப்பட்டாலன்றி 1964, யூலை 31 இல் 14,126 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான கட்டளைகளுக்குள்ள அட்டவணைகளில் விவரிக்கப்படும் அல்லது மீளவரை யறுக்கப்படும் பிபிலே, கொடகம, மொனராகலே, சியம்பலந்துவ, தம்ப கல்லே கிராமப் பிரதேசங்களில் ஏதாவதொன்றைக் கருதும் ;

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது வேறுவிதம் சொல் லப்பட்டாலன்றி, 1965, பெப்புருவரி 1 இற்கு முன்னர் குறித்த புதிய கிராமப் பிரதேசங்கள் உட்படத்த ப்பட்டிருந்த வேகம்பற்று நில்கல, புத்தளை வேதிரட, தம்பகல்லே கிராமப் பிரதேசங்களில் ஏதாவதொன்றைக் கருதும்.

9-489/1—9.9.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,501

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந் உ.

### கட்டளை

பதுளை மாவட்டத்து யட்டிகிந்த பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பசறை கிராமப் பிரதேசத்திலிருந்து புறநீங்கல் செய்யப்பட்ட பிரதேசத்துக்கு புதிய மதுல்சிம கிராமப் பிரதேசத்தை அமைப்பது சம்பந்தமாக, 1964, ஜூன் 22 இன் 14,073 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான கட்டளைகளைச் செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு; இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில் இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. மதுல்சிம கிராமப் பிரதேசத்தின் புதிய கிராமச் சபை, அப்புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், புதிய மதுல்சிம கிராமப் பிரதேசம் முன்னர் உட்படுத்தப்பட்டிருந்த பசறை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. 1965, ஜனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான பசறை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும், இத்துணைவிதிகள் புதிய மதுல்சிம கிராமப் பிரதேசத்துக்கு சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, மதுல்சிம கிராமப் பிரதேசத்தில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப்பவையாகக் கருதவும்படும்.

3. 1965, ஜனவரி 31 இல் பசறை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகையில் ஒரு பாதி, 1965, பெப்புருவரி 1 இல் மதுல்சிம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படும்.

4. 1965, ஜனவரி 31 இல், புதிய மதுல்சிம கிராமப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ளதும் பசறை கிராமப் பிரதேசத்துக்குக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ளதுமான காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும், 1965, பெப்புருவரி 1 இல் மதுல்சிம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாக கருதப்படும்.

5. பசறை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், அவை புதிய மதுல்சிம கிராமப் பிரதேசத்துக்கு சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு 1965, பெப்புருவரி 1 இல் இருந்து மதுல்சிம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்படுவதாகக் கருதப்படும்.

6. 1965, ஜனவரி 31 இல் பசறை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோரில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்கள், சாதனங்கள், கோப்புகள் யாவும், அவை மதுல்சிம கிராமப் பிரதேசத்துக்கு சம்பந்தமுடையனவாயிருக்குமளவுக்கு, 1965, பெப்புருவரி 1 இல் இருந்து மதுல்சிம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோருக்கு மாற்றப்படுவதாக கருதப்படும்.

7. 1965, ஜனவரி மாதம் 31 இல் பசறை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க்காணும் அசைவுள்ள சொத்து, 1965, பெப்புருவரி 1 இல் மதுல்சிம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படுவதாகக் கருதப்படும் :—

கைபிடிக் கதிரைகள் 2
எழுத்து மேசை 1
தட்டெழுத்துப்பொறி (சிங்களம்) 1
துளையிடுங்கருவி 1
ஒற்றளை 1
தோட்டிவேலை வண்டி (பழையது) 1
இலாச்சிகளுள்ள மேசை 1
மேசைத்துணி 1
அழைப்பு மணி 1
கடதாசிப்பாரம் (கண்ணாடி) 1
ஐஸ் கூஜா (கழுகுக்குறி) 1
மைக்கூடு (கண்ணாடி) 1

8. அதன் முன்னுள், இந்நாள் பணியாட்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் உதவும் விடயத்தில் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குள்ள பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படும் :—

(அ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு, புதிய மதுல்சிம, பசறை கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 வீதத்தில்.

(ஆ) பழைய கிராமப் பிரதேசத்தில் சேவை செய்தபின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் பணியாட்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு, புதிய மதுல்சிம, பசறை கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 வீதத்தில்.

(இ) பழைய கிராமச் சபையில் இப்பொழுது சேவை செய்பவர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய மதுல்சிம, பசறை கிராமச் சபைகளுக்கிடையே 1 : 1 வீதத்தில்.

9. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது வேறு விதம் சொல்லப்பட்டாலன்றி, 1964, ஜூன் 22 இன் 14,073 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான கட்டளைகளால் மீள அமைக்கவும் மீள வரையறுக்கவும் பட்ட மதுல்சிம கிராமப் பிரதேசத்தை அல்லது பசறை கிராமப் பிரதேசத்தைக் கருதும் ;

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது மேற்கூறிய புதிய மதுல்சிம, பசறை கிராமப் பிரதேசங்களைக் கொண்டிருந்த பசறை கிராமப் பிரதேசத்தைக் கருதும்.

9-489/2—9.9.65ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

## கிராமச்சபை கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான, (257 ம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந் உ.

### கட்டளை

1964, ஜூலை 31 ந் தேதிய 14,126 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையிற் குறிப்பிடப்பட்டுள்ள வவனியா மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு பெரும்டாக இறைவரி உத்தியாகத்தர் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்புக் கிராமப் பிரதேசத்தின் எல்லைகளை மாற்றித் திரும்ப வரையறுத்தலையும் 1964, ஜூலை 31ந் தேதிய 14,126 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டு 1964, செப்டெம்பர் 23 ம் தேதிய 14,177 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினுல் திருத்தப்பட்டபடியான கட்டளையில் குறிப்பிடப்பட்ட வவனியா மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு பெரும்டாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கரிக்கட்டுமூலைவடக்குக் கிராமப்பிரதேசத்தை அமைத்தலையும் செயற்படுத்துவதற்கு அவசியமான காரியங்களுக்கு, இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள விதமாக இதனுல் ஏற்பாடு செய்யப்படுகிறது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச்சபை, கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகலமான நோக்கங்களுக்கும் அப்புதிய கிராமப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையை அடுத்தமைந்ததாக இருத்தல் வேண்டும்.

2. 1965, ஜனவரி 31 இல் நடைமுறையில் இருக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும், அப்புதிய கிராமப் பிரதேசத்தோடு இத்துணைவிதிகள் சம்பந்தப்படுமளவுக்கு புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டியதுடன் அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு இருப்பதாகக் கருதப்படவும் வேண்டும்.

3. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொதுநிதியின் வரவிலுள்ள தொகையின் பாதி, 1965, பெப்பிரவரி மாதம் 1 இல் இவ்வட்டவணையிற் 4 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்படவேண்டும்.

4. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ளதும் ஏதாவது சொல்லப்பட்ட வேலை அல்லது வேலைகள் சம்பந்தமாக பழைய கிராமப் பிரதேசக் கிராமச்சபைக்கு ஒதுக்கப்பட்ட உதவி நன்கொடையில் செலவிடப்படாதது

மான தொகை குறித்த வேலை அல்லது வேலைகள் எங்கு செய்யப்பட வேண்டியுள்ளனவோ அப் புதிய கிராம எல்லையின் கிராமச்சபைக்கு மாற்றப்படவேண்டும்.

5. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசக் கிராமச்சபைக்கு உரித்தாயுள்ள, அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிதியைத் தவிர எல்லா அசைவுள்ள சொத்தும், 1965, பெப்பிரவரி முதலாந் தேதியிலிருந்து புதுக்குடியிருப்பு கிராமப் பிரதேசக் கிராமச்சபைக்கு உரித்தாக்கப் பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

6. 1965, ஜனவரி 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டிடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும், 1965, பெப்பிரவரி 1 இல் அக்காணி, கட்டிடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து இருக்கும் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

7. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புக்கள், கடமைப்பாடுகள் அனைத்தும் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபை ஒவ்வொன்றையும் பொறுத்தவரை 1965, பெப்பிரவரி 1 இல் இருந்து அப்புதிய பிரதேசத்துக் கிராமச்சபைக்குக் கையளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

8. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையின் முன்னைய ஊழியர்களுக்கும் இப்போதைய ஊழியர்களுக்கும் உபகாரச்சம்பளம் கொடுத்தல் சம்பந்தமான நன்கொடைப் பொறுப்புக்கள், பின்வரும் முறைப்படி பிரிக்கப்படவேண்டும் :—

(அ) பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் தற்பொழுது கொடுபடும் உபகாரச்சம்பளம் சம்பந்தமாக புதுக்குடியிருப்புக் கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபைக்கும் கரிக்கட்டுமூலை வடக்கு கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபைக்குமிடையில் 1 : 1 விகிதத்தில்;

(ஆ) பழைய கிராமச்சபையில் கடமையாற்றியபின் மாற்றப்பட்ட ஊழியர்களுக்குரிய உபகாரச்சம்பளம் சம்பந்தமாக புதுக்குடியிருப்புக் கிராமப்பிரதேசத்தின் கிராமச்சபைக்கும் கரிக்கட்டுமூலை வடக்குக் கிராமப்பிரதேசத்தின் கிராமச்சபைக்கும் இடையில் 1 : 1 விகிதத்தில் ;

(இ) பழைய கிராமப்பிரதேசத்தின் கிராமச்சபையில் தற்பொழுது கடமையாற்றிவரும் ஊழியர்களுக்குரிய உபகாரச்சம்பளம் சம்பந்தமாக புதுக்குடியிருப்பு கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபைக்கும் கரிக்கட்டுமூலை வடக்கு கிராமப்பிரதேசத்தின் கிராமச் சபைக்கும் இடையில் 1 : 1 விகிதத்தில்.

9. இந்த அட்டவணையில் :—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது, 1964, ஜூலை 31 ந் தேதிய 14,126 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் மாற்றப்பட்டுத் திரும்ப வரையறுக்கப்பட்ட புதுக்குடியிருப்புக் கிராமப் பிரதேசம், அல்லது 1964, செப்ரெம்பர் 23 ந் தேதிய 14,177 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலந் திருத்தப்பட்டபடியான, 1964, ஜூலை 31 ந் தேதிய 14,126 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் அமைக்கப்பட்ட கரிக்கட்டுமூலை வடக்குக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது, 1965, பெப்புருவரி 1 ந் தேதிக்கு முன்னிருந்த புதுக்குடியிருப்புக் கிராமப் பிரதேசமெனப் பொருள்படும்.

9–489/3—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

# துணை விதிகள்

## கஹாவத்த பட்டினச் சபை

### பட்டினச் சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின்கீழ் கஹாவத்த பட்டினச் சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 25.8.1965.

### பொதுச் சந்தைகள் சம்பந்தமான துணைவிதிகள்

1964, மே 8 இன் 14,028 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான ஒரு தீர்மானத்தின் மூலம் சபையால் ஏற்கப்பட்ட நியமத் துணைவிதிகளின் 15 ஆம் பாகத்து 4 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்கு, கஹாவத்த பொதுச் சந்தையில் ஒரு கடையை ஆட்சிபண்ணுதற்கான ஒரு அனுமதிச் சீட்டு அல்லது சீட்டு வைத்திருக்கும் ஒவ்வொருவரும், இதற்குள்ள அட்டவணையில் விதிக்கப்பட்டிருக்கும் வீதங்களின்படியான வாடகையைக் கொடுக்க வேண்டும் :

| அட்டவணை | | மாதமொன்றுக்குக் கொடுபட வேண்டிய வாடகை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 2 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 3 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 4 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 5 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 6 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 7 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 8 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 9 ஆம் இலக்க காயகறிக் கடை | .. | 22 50 |
| 10 ஆம் இலக்க காய்கறிக் கடை | .. | 22 50 |
| 1 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | .. | 160 00 |
| 1 ஆம் இலக்க ஆட்டிறைச்சிக் கடை | .. | 60 00 |
| 1 ஆம் இலக்க மீன்கடை | .. | 35 00 |
| 1 ஆம் இலக்க சுற்றிவர அடைக்கப்பட்ட கடை | .. | 25 00 |
| 2 ஆம் இலக்க சுற்றிவர அடைக்கப்பட்ட கடை | .. | 25 00 |
| 3 ஆம் இலக்க சுற்றிவர அடைக்கப்பட்ட கடை | .. | 25 00 |
| 4 ஆம் இலக்க சுற்றிவர அடைக்கப்பட்ட கடை | .. | 25 00 |
| 5 ஆம் இலக்க சுற்றிவர அடைக்கப்பட்ட கடை | .. | 25 00 |
| 6 ஆம் இலக்க சுற்றிவர அடைக்கப்பட்ட கடை | .. | 25 00 |

9–516—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

# நானாவிதம்

## பொத்துவில் கிராமச் சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் பின் காணும் அட்டவணையிற் காணப்படுபவர்களிடமிருந்து 1965 ம் ஆண்டிற்கு "புச்சர் லைசன்ஸ்" தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது. இந்தக் கிராமச் சங்க இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் லைசன்ஸ்கள் கொடுப்பதை மறுக்க விரும்பினால், மறுப்பிற்கான காரணங்களை இக்கெசற்றிற் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக நமக்கனுப்பி வைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றது.

அட்டவணை

| விண்ணப்பகாரர் | | விலாசம் | | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|---|
| 1. மு. கா. அலுவக்கர் | .. | .. 2 ம் குறிச்சி, பொத்துவில் | .. | பொத்துவில் 2 ம் குறிச்சி கடை |
| 2. K. M. அலுவக்கர் | .. | .. 1 ம் குறிச்சி, பொத்துவில் | .. | பொத்துவில் கி. ச. மார்க்கட் கடை. |

Y. M முஸ்தபா, J. P.
கி. ச. தலைவர், பொத்துவில்.

கி. ச. காரியாலயம்,
பொத்துவில்,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 27 ந் உ.

9–529—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

## அறிவித்தல்

1957 ம் ஆண்டு மின்சார (திருத்தம்) அதிகாரச் சட்டம் இலக்கம் 59 ஆல் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டு மின்சார அதிகாரச் சட்டம் இலக்கம் 19 ன், 9 ம் பிரிவின் கீழ் 1956 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் தேதியுடைய அரசாங்க வர்த்தமானி இலக்கம் 10,899 இல் பிரசுரித்துள்ள, மேற்கூறிய அதிகாரச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள பிரமாணங்களின்படியும் எனக்கு உரிமையாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, மேற்கூறிய பிரமாணங்களின் கீழ், யாழ்ப்பாண மாநகரசபைக் காரியாலயத்தில் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ம் தேதி காலை 8.30 மணிக்கு, யாழ்ப்பாண மாநகரசபைக்கு வழங்கப்பட்டுள்ள, உத்தரவுச் சீட்டின் பட்டோலை "அ" வில் கண்டுள்ள மின்சார விநியோக எல்லையை விரிவாக்குவதற்காக ஓர் விசாரணை நடந்த உத்தேசித்துள்ளேன் என சம்பந்தப்பட்ட யாவருக்கும் இத்தால் அறிவிக்கிறேன். விரிவாக்கும் எல்லைகள் பின்வருமாறு :—

(1) நல்லூர்க் கிராமச்சங்கப் பக்கமாக ஆத்திருளம் வீதி–பரமேஸ்வராக் கல்லூரிச்சந்திக்கும் பரமேஸ்வராக் கல்லூரி வீதி–பலாலி வீதிச் சந்திக்கும் இடையே பரமேஸ்வராக் கல்லூரி வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(2) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாகப் பரமேஸ்வராக் கல்லூரி வீதிக்கும், திருநெல்வேலி வீதி (சிவன்கோவில்) சந்திக்கும் இடையே பலாலி வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(3) நல்லூர்க் கிராமச் சங்கப்பக்கமாகப் பலாலி வீதி–திருநெல்வேலி வீதி (சிவன்கோவில்) சந்திக்கும், திருநெல்வேலி வீதி (சிவன்கோவில்)— கோவில் வீதிச் சந்திக்கும் இடையே திருநெல்வேலி வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(4) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாக திருநெல்வேலி வீதி (சிவன் கோவில்)—கோவில் வீதி சந்தியிலிருந்து, கோவில் வீதி–சட்ட நாதர் கோவில் வீதிச் சந்தி வரைக்கும், கோவில் வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(5) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாக, கோவில் வீதி–சட்டநாதர் கோவில் வீதி சந்தியிலிருந்து சட்டநாதர் கோவில் வீதி–பருத்தித்துறை வீதிக்கு சட்டநாதர்கோவில் மத்தியிலிருந்து 150 யார்.

(6) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாக சட்டநாதர் கோவில் வீதி–பருத்தித்துறை வீதி சந்தியிலிருந்து, பருத்தித்துறை வீதி–ஆடியபாதம் வீதிச் சந்திவரையும், பருத்தித்துறை வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(7) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாக, பருத்தித்துறை வீதி–ஆடியபாதம் வீதிச் சந்தியிலிருந்து, ஆடியபாதம் வீதி–செம்மணி வீதி சந்திவரையும், ஆடியபாதம் வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(8) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாக, ஆடியபாதம் வீதி–செம்மணி வீதி சந்தியிலிருந்து, செம்மணி வீதி–அம்பாள் வீதிச் சந்தி வரையும், செம்மணி வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

(9) நல்லூர்க் கிராமச் சங்கப் பக்கமாக, கண்டி வீதியும் வாய்க்காலும் சந்திக்குமிடத்திலிருந்து, கண்டி வீதியில் 945 யாருக்கு, கண்டி வீதியின் மத்தியிலிருந்து 150 யார்.

இவ்விசாரணையையிட்டு முறைப்பாடுகள் செய்யவிரும்புவோர், தங்கள் முறைப்பாடுகளை மூன்று எழுத்துருவ பிரதிகளில், பொறியிட்ட கடித வுறைகளில் இட்டு, பதிவுத்தபால் மூலமோ, நேரிலோ, பிரதான மின்சார பரிசோதகர், தபால் பெட்டி இலக்கம் 540, கொழும்பு என்ற விலாசத்திற்கு 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ந் தேதி காலை 10 மணிக்கு முன்னதாக சேரும்படி அனுப்பி வைத்தல் வேண்டும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறார்கள்.

முறைப்பாடுகள் சம்பந்தமான ஏனைய விபரங்களுக்கு, இவ்வறிவித்தலில் முதல் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பிரமாணங்களைப் பார்க்கவும்.

டி. ஆர். சி. டி. அல்விஸ்,
மின்சார பரிசோதகர்.

மின்சாரப் பரிசோதகர் காரியாலயம்,
தபால் பெட்டி இலக்கம் 540,
கொழும்பு 10,
25.8.65.

9–527—9.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,501

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.